**EP.No. 252/2019**

**PW 1–பாலசுப்பிரமணியம்**

**த/பெ.பழனிசாமி**

**நாள். 23.01.2025.**

**<u>மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 2012 ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கோவிந்தராஜ் என்ற நபர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் இல்லை. 2013 இல் தான் தாக்கல் செய்தேன். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. கோவிந்தராஜ் என் மீது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 336/2014 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் கோவிந்தராஜுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் தான் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்திருக்கும் விவரம் எனக்கு தெரியாது. பின்னிட்டு எனக்கு தெரியவந்தது.

2. அந்த தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என்று நான் மனு செய்து இருக்கிறேன் அந்த மனு இடைநிலை மனு எண் 231/2020 அன்று கோப்பையில் எடுக்கப்பட்டு அந்த மனுவும் பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது .அசல் வழக்கு எண் 336 இன் தீர்ப்பின் மீது நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவை காலம் கடத்தி மோசடி செய்ய வேண்டும்

என்ற கெட்ட எண்ணத்துடன் நான் ஆறு வருடங்கள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்து பொய் வழக்கு அடைகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.